# ஆஸ்திரேலியா நாட்டிற்கு வெளியில் இருந்து செயல்படும் குடியேற்ற ஏஜென்ட்டுகள் பற்றிய தகவல்

## விசா விண்ணப்பிப்போருக்கான ஆலோசனை

விசா விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்கும்போது குடியேற்ற ஏஜென்ட்டின் உதவி உங்களுக்கு தேவைப்படாது என்பதை நினைவில் கொள்வது முக்கியமானதாகும். ஒரு குடியேற்ற ஏஜென்ட்டால் உங்கள் விண்ணப்பத்தின் மீது செல்வாக்கு செலுத்தவோ விரைவில் அனுமதி கிடைக்கச் செய்யவோ முடியாது. அதேபோன்று விண்ணப்பம் மீதான விசாரணையை விரைவுபடுத்தவும் முடியாது.

குடியேற்ற மற்றும் குடியுரிமை துறை (டிஐஏசி) பரிசீலிக்கும் பெரும்பான்மை விண்ணப்பங்கள் குடியேற்ற ஏஜென்ட்டுகளால் சமர்ப்பிக்கப்பட்டவை அல்ல.

இருந்தபோதிலும், விசா விண்ணப்பத்திற்கு சமர்ப்பிப்பதில் உங்களுக்கு தன்னம்பிக்கை இல்லாவிட்டாலோ, அல்லது உங்கள் விஷயம் சிக்கலானதாக இருந்தாலோ நீங்கள் பதிவுபெற்ற குடியேற்ற ஏஜென்ட்டை பயன்படுத்திக்கொள்ள முயலுங்கள்.

ஆஸ்திரேலியா நாட்டுக்குள் செயல்படும் குடியேற்ற ஏஜென்டுகள் அதற்கான குடியேற்ற ஏஜென்ட்டுகள் பதிவு ஆணைய அலுவலகத்தில் (எம்ஏஆர்ஏ அலுவலகம்) பதிவு செய்திருக்க வேண்டும் என்பது சட்டப்பூர்வமான தேவையாகும். ஆஸ்திரேலியாவில் பதிவு செய்துள்ள சில குடியேற்ற ஏஜென்ட்டுகள் பிற நாடுகளிலும் செயல்படுகிறார்கள். நீங்கள் பதிவுபெற்ற ஏஜென்ட்டுகள் பற்றிய விவரங்களை எம்ஏஆர்ஏ அலுவலக வலைத்தளத்தில் www.mara.com.au. அறியலாம்.

## விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

நீங்கள் விண்ணப்பத்தை டிஐஏசியிடம் நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது உங்கள் சார்பில் விண்ணப்பத்தை சமரப்பிக்க ஒரு பிரதிநிதியை நியமித்துக் கொள்ளலாம். சமர்ப்பிப்பவர் யார் என்பதை பொருட்படுத்தாமல் இத்துறை சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்கிறது. பெரும்பான்மையான விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியா நாட்டிற்கு வெளியில் இருந்து செயல்படும் பதிவுபெறாத ஒரு குடியேற்ற ஏஜென்ட்டு உங்கள் சார்பாக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தால், அதற்கு ஒரு அடையாள எண் தரப்படுகின்றது. இந்த எண் டிஐஏசி-யின் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. அதனால் ஏஜென்ட்டுக்கு முன்னுரிமையோ அல்லது சலுகையோ கொடுக்கப்படுவதில்லை.

விசாக்கள், விண்ணப்ப பரிசீலனை முறை மற்றும் டிஐஏசி அலுவலகம் பற்றிய விவரங்கள் www.immi.gov.au. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும்.

**ஒரு குடியேற்ற ஏஜென்ட்டை பயன்படுத்த தேர்ந்தெடுத்தல்**

நீங்கள் ஒரு குடியேற்ற ஏஜென்ட்டை நியமித்துக் கொள்ள விரும்பினால், ஏம்ஏஆர்ஏ அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஏஜென்ட்டை பயன்படுத்திக் கொள்ளுமாறு டிஐஏசி பரிந்துரை செய்கிறது. இது இயலாது என்ற நிலையில், உங்கள் நாட்டில் பதிவுபெற்ற ஒருவரை நியமித்துக்கொள்ளுங்கள்.

எம்ஏஆர்ஏ அலுவலகத்தில் பதிவுபெற்ற ஏஜென்ட் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பாரோ என்ற சந்தேகம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் உங்கள் ஊரின் டிஐஏசி அலுவலகத்துக்கு அதுபற்றி கூறுங்கள். ஏம்ஏஆர்ஏ அலுவலகத்தில் பதிவு பெற்ற ஏஜென்ட்டுகள் பற்றிய பிற புகார்களுக்கான விவரங்கள் www.mara.com.au. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும்.

ஆஸ்திரேலியாவிற்கு வெளியில் பதிவுபெறாத ஒரு ஏஜென்ட்டை நியமித்துக் கொள்ள நீங்கள் விரும்பினால், அவரிடம் இருந்து நியாயமாக நீங்கள் என்ன பெறமுடியும் என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அந்த ஏஜென்ட் திறமையற்றவராகவோ, நேர்மையற்றவராகவோ அல்லது ஏமாற்றுபவராகவோ இருந்தால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

பதிவுபெறாத ஒரு குடியேற்ற ஏஜென்ட்டு குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவரோ என நீங்கள் சந்தேகப்பட்டால், உங்களது ஊரில் உள்ள சட்ட அமலாக்க அதிகாரிகளிடம் அவரைப் பற்றி நீங்கள் புகார் செய்ய வேண்டும். மேலும் உங்கள் ஊரின் டிஐஏசி அலுவலகத்திற்கும் தெரிவியுங்கள்.

**நினைவில் கொள்ளுங்கள்**

- குடியேற்ற ஏஜென்ட்டின் உதவி உங்களுக்குத் தேவையில்லை.
- குடியேற்ற ஏஜென்ட்டின் உதவி தேவை என நீங்கள் தேர்ந்தெடுத்தால் அவர் பதிவுபெற்ற ஏஜென்ட்டாக இருக்கட்டும்.
- ஆஸ்திரேலியாவில் பதிவு பெற்ற குடியேற்ற ஏஜென்ட்டை நீங்கள் பயன்படுத்துமாறு டிஐஏசி பரிந்துரைக்கிறது.

கூடுதல் தவகல்கள் www.immi.gov.au என்ற வலைத்தளத்தில் கிடைக்கும்.